# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2103/18 - 2018 දෙසැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.12.27

*2103/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 4/1/ஓ/அத்பத்/87/2016(DIVML/13/2018).
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/ 7/2016/HW/310.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மல்லாவ பிற்றிய பிரதேச செயலாளர் பிரிவில், வட்டார இல. 715, கெவணகிராம கிராம அலுவலர் பிரிவில் கெவண வத்த கிராமத்தில் அமைந்துள்ள, குருநாகல் மாவட்ட நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட காணி அளவீட்டு வரைபட இல. 420204, பிரிவு 01, தாள் இல. 10, 2018.12.17 ஆந் திகதியில் குறிப்பிடப்பட்ட 0.4893 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய 7 துண்டுகள் (ஏழு) இன் விபரங்கள் பின்வருமாறு :

1. **துண்டு இல. 304**
காணியின் பெயர்: தெரியவில்லை; விபரம்: கால்வாய்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தெரியவில்லை; விஸ்தீரணம்: 0.0115 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 305**
காணியின் பெயர்: கொம்மாரபிற்றிய; விபரம்: நெல் வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தேவதா பெஜ்ஜயலாகே சுரநிமல; விஸ்தீரணம்: 0.0432 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 308**
காணியின் பெயர்: கொம்மாரபிற்றிய; விபரம்: நெல் வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தேவதா பெஜ்ஜயலாகே சுரநிமல; விஸ்தீரணம்: 0.0332 ஹெக்டயார்.

4. **துண்டு இல. 309**
காணியின் பெயர்: கொம்மாரபிற்றிய; விபரம்: நெல் வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஹொரத்தல்கே ஜயசிங்க; விஸ்தீரணம்: 0.1700 ஹெக்டயார்.

5. **துண்டு இல. 310**
காணியின் பெயர்: கொம்மாரபிற்றிய; விபரம்: நெல் வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திஸ்ஸாநாயக்க முடியன்சேலாகே சிசிர ரோகன திசாநாயக்க; விஸ்தீரணம்: 0.1208 ஹெக்டயார்.

6. **துண்டு இல. 311**
காணியின் பெயர்: கெவண கும்புர; விபரம்: நெல் வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தேவதா பெஜ்ஜயலாகே சிரோமி தர்சிகா; விஸ்தீரணம்: 0.0766 ஹெக்டயார்.




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***7. துண்டு இல. 310***

*காணியின் பெயர்: கொம்மாரபிற்றிய; விபரம்: நெல் வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திஸ்ஸாநாயக்க முடியன்சேலாகே புஸ்ப ஜயனந்த திசாநாயக்க; விஸ்தீரணம்: 0.0340 ஹெக்டயார்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி மல்லாவபிற்றிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டு தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைக்கு உரிமை கோருபவரினால் முகவராக அனுப்பப்படுபவர் உரிமை குறித்தொதுக்கப்பட்டமையை கடிதம் மூலமாக நிரூபிக்கப்படாவிட்டால் முகவராக அனுப்பப்படுபவரின் கூற்று அல்லது சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை குறித்து கவனம் செலுத்தவும்.

ஆர். எம். பி. ரத்நாயக்க,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
மல்லாவபிற்றிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மல்லாவபிற்றிய,
2018, திசெம்பர் 24.

1 - 218